**PR/2018/26/T**


# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk


செப்டம்பர் 03, 2018

<u>ஊடக அறிக்கை</u>

## ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் 2018 பாராட்டுவிருது வழங்கி பேராசிரியர் கமலா லியனகே கௌரவம்

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் பாராட்டுவிருதை பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் எமெரிடா கமலா லியனகேக்கு வழங்கி இலங்கைக்கான ஜப்பானியத்தூதுவர் கெனிச்சி சுகனுமா கௌரவித்துள்ளார். கண்டியிலுள்ள ஏர்ல்ஸ் ரீஜன்சி ஹோட்டலில், ஓகஸ்ற் 31ம் திகதி இடம்பெற்ற விசேட வைபவத்தின் போதே இந்தப் பாராட்டு விருதை வழங்கி பேராசிரியர் கமலா லியனகேவை ஜப்பானியத்தூதுவர் கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் விஞ்ஞானத்துறையில் விசேடமாக தற்கால ஜப்பானிய அரசியலில் இலங்கையிலுள்ள முக்கியமான புலமைக்கல்வியாளர்களில் ஒருவராக பேராசிரியர் லியனகே திகழ்கின்றார். 1985ம் ஆண்டில் ஜப்பானிய அரசாங்கத்தின் புலமைப்பரிசிலைப் பெற்று டோக்கியோ பல்கலைக்கழகத்தில் அவர் கல்விகற்றிருந்தார். நாடுதிரும்பிய பின்னர் தற்கால ஜப்பானிய அரசியலை பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கற்றுக்கொடுப்பதற்காக தம்மை அவர் அர்ப்பணித்துக்கொண்டார். இலங்கையில் புலமையாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் நிபுணர்கள் மத்தியில் ஜப்பானிய கற்கையை வளர்ப்பதற்கு இவர் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளார்.

2013ம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இலங்கை-ஜப்பான் கல்வி மையத்தை நிறுவுவதில் ஸ்தாபக உறுப்பினராக இருந்துகொண்டு பெரும் பங்காற்றியிருந்தார். கல்வி மையத்திற்கான அவரது தலைமைத்துவமும் பங்களிப்பும் வருடாந்த இலங்கை-ஜப்பான் கூட்டு ஆராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்கும் அதன் மூலமாக ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான கீர்த்திமிக்க கல்விப் பரிமாற்றத் தளமாக நன்மதிப்பை வளர்த்துக்கொள்வதற்கும் வழிசமைத்தது.

மேலும், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பல சிங்கள மொழி வல்லுனர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிற்சியளிக்கப்பட்டனர். பல்கலைக்கழக பேராசிரியர் என்ற வகையில் பேராசிரியர் கமலா லியனகே, தன்னுடைய வேலைப்பளுவின் மத்தியிலும் தாமாக முன்வந்து பல்வேறு வகையான உதவிகளையும் ஒத்தாசைகளையும், கண்டியில் தங்கியிருந்த காலப்பகுதியில் பயிலுநர்களுக்கு வழங்கியிருந்தார்.

இலங்கையில் ஜப்பானிய ஆய்வுகளுக்கும் , ஜப்பான் -இலங்கை நட்புறவினை ஊக்குவிப்பதற்கும் தனது நீண்டகால செயற்பாடுகள் மூலமாக பாரிய பங்களிப்பை பேராசிரியர் கமலா லியனகே வழங்கியுள்ளதனை அங்கிகரிக்கின்ற வகையிலேயே இந்த விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிற்கும் வெளிநாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவதற்காக ஆற்றுகின்ற அளப்பரிய பங்களிப்பை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் வகையிலேயே வெளிநாட்டு அமைச்சரின் பாராட்டு விருது தனிப்பட்டவர்களுக்கும் குழுக்களுக்கும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

*************************************************************

மேலதீக விபரங்களுக்கு கலாசாரப் பிரிவினருடன் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி: 011-269-3831~3 (ext.258)